


**30. 06. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய வேளாண் துறையை மேம்படுத்துவதன் அவசியத்தை வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தி உள்ளார்.

2. நாட்டில் சரக்கு சேவைவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடுகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை, அரசு திட்டங்களின் செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

4. B.E., B.Tech உள்ளிட்ட பொறியியல் படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியல் நாளை வெளியிடப் படுகிறது.

5. ஐ. சி. சி. உலககோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று தொடங்குகின்றன.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஆந்திர பிரதேச மாநிலம் விழிய நகரத்தில் மத்திய பழங்குடியினர் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் 10 மகளிர் உட்பட 13 மாணாக்கருக்கு தங்க பதக்கங்களை வழங்குவதுடன், 373 பேருக்கு குடியரசு தலைவர் பட்டங்களை அளிக்கவுள்ளார்.

மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோர் இதில் கலந்து கொள்கின்றனர்.

நாளை அனந்தபுரமு மத்திய பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவிலும் குடியரசு தலைவர் கலந்து கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங் சௌஹான்

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய வேளாண் துறையை மேம்படுத்துவதன் அவசியத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தி உள்ளார்.

ஹரியானாவில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், எல்நினோ தாக்கத்தால் மழைப் பொழிவு குறைந்துள்ள நிலையில் மாற்று முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

மண்வளம், உரத்தேவைகள் தொடர்பான தகவல்களை விவசாயிகளுக்கு வழங்க புதிய செயலி உருவாக்கத்திற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் உணவு தானிய இருப்பை போதுமான அளவில் பராமரித்து வருவதாக கூறிய அமைச்சர், இயற்கை விவசாயத்தை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

ஏதென்ஸை தலைமையிடமாக கொண்ட யூரோ வங்கி, கிரீஸிலிருந்து இந்தியாவிற்கு எல்லை தாண்டிய பண பரிமாற்றங்களுக்கு UPI அடிப்படையிலான சேவையை தொடங்கியுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர்
திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மின்னணு பணபரிமாற்றம் சர்வதேச அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டதற்கு சான்றாக இது திகழ்கிறது என்று தமது சமூக வலைதளப் பதிவில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

உபேந்திர துவேதி

தேசிய பாதுகாப்பு தொடர்பான அனைத்து நிலைகளிலும் ராணுவம் பொறுப்புணர்வுடன் திறம்பட பணியாற்றி வருவதாக ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர துவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தமது பணி நிறைவு விழாவில் பேசிய அவர், தொலைநோக்கு பார்வை, தொழில்நுட்ப மேம்பாடு உள்ளிட்டவைகளை அடிப்படையாக கொண்டு ராணுவம், கடற்படை, விமானப்படை ஒருங்கிணைந்து பணியாற்றுவதாக பெருமிதம் வெளியிட்டார்.

முன்னதாக புதுதில்லி தேசிய போர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அவர் அஞ்சலி செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இயற்கை எரிவாயு அமைச்சகம்

பெட்ரோல், டீசல் விற்பனை விநியோகம் தொடர்பான தற்காலிக ஒழுங்குமுறை நடவடிக்கைகள், கட்டுப்பாடுகள் நாளைமுதல் விலக்கிக் கொள்ளப்படுவதாக மத்திய பெட்ரோலிய, இயற்கை எரிவாயு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்காசிய சூழல் காரணமாக இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகவும், தற்போது அவை நீக்கப்படுவதாகவும் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>சரக்கு சேவைவரி</u>

நாட்டில் சரக்கு சேவைவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடுகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்தை அடுத்தமாதம் 31-ம் தேதிவரை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக இன்றுடன் இதற்கான காலஅவகாசம் முடிவடைய இருந்த நிலையில் மக்களின் கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை எனவும் மத்திய நிதியமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வரி செலுத்துவோர் மேல் முறையீடுகளை முன்கூட்டியே திட்டமிட்டு தாக்கல் செய்யுமாறும் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>ஜே.பி. நட்டா</u>

நாட்டின் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 818 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், சுகாதார கட்டமைப்புகளை வலுப்படுத்தும் அதே வேளையில், திறன்வாய்ந்த மருத்துவ பணியாளர்களுக்கும் அரசு முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்ற தினம்

சர்வதேச நாடாளுமன்ற தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் ஜனநாயக நடைமுறை என்பது மக்கள் நம்பிக்கையின் மிக உயர்ந்த வெளிப்பாடு எனவும், நாட்டின் எதிர்கால பாதையை தீர்மானிப்பதற்கான அடித்தளம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை, அரசு திட்டங்களின் செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயரதிகாரிகளுடன் நடைபெறும் மாநாட்டின் இரண்டாவது நாளான இன்று, 28 துறைகளின் திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

தொடர்ந்து வனத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனும் முதலமைச்சர் இன்று கலந்தாலோசனை மேற்கொள்ள உள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வெங்கட ரமணன்

சென்னை அம்மா உணவகத்தில், உணவின் தரம், சுகாதாரம் உள்ளிட்டவை குறித்து மாநில உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. வெங்கட ரமணன் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது உணவகத்தை தூய்மையாக பராமரிப்பது, தரமான உணவுகளை குறித்த நேரத்தில் வழங்குவது ஆகியவற்றை பணியாளர்கள் உறுதி செய்ய வேண்டுமென அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

B.E., B.Tech

B.E., B.Tech உள்ளிட்ட பொறியியல் படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியல் நாளை வெளியிடப்படுகிறது.

இணையவழி கலந்தாய்விற்கான அட்டவணையும் நாளை வெளியிடப்படவுள்ளது.

பொறியியல் படிப்புகளில் சேர இதுவரை 2 லட்சத்து 42 ஆயிரம் மாணாக்கர் விண்ணப்பித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய வேளாண் உள்கட்டமைப்பு நிதியளிப்பு திட்டத்தின் கீழ் கடனுதவி பெற விண்ணப்பிக்கலாம் என ஆட்சித் தலைவர் திருமதி. ஷரண்யாஅறி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் மாவட்டத்தில் அதிக அளவில் மாம்பழ விளைச்சல் இருப்பதால் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் மனுக்களாக சமர்ப்பித்தனர்.

தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 6-ம் தேதி தொடங்கி 3 நாட்கள் சென்னை ஈக்காட்டுதாங்கலில் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம் நாளை தொடங்கி அடுத்தமாதம் 10-ம் தேதிவரை நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>சிவகங்கை</u>

சிவகங்கை மாவட்டத்தில் பொதுமக்கள் கோடை மழை உயிரிழப்புகளை தவிர்க்க, அரசு கூறும் நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என ஆட்சித் தலைவர் திரு.ஆகாஷ் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>மீனவர்கள்</u>

தூத்துக்குடி கடற்பகுதியில் பலத்த சூறாவளி காற்று காரணமாக விசைப்படகு மீனவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று கடலுக்குள் மீன் பிடிக்க செல்லவில்லை என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>விபத்து</u>

திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே. பேட்டை அருகே இருசக்கர வாகனம் புளிய மரத்தின் மீது மோதிய விபத்தில், இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த மாணாக்கர் இருவர் சம்பவ இடத்திலேயே இன்று உயிரிழந்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பறிமுதல்</u>

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே போதைப் பொருள் தடுப்பு பிரிவு காவல் துறையினர் மேற்கொண்ட வாகன சோதனையில் 5 லட்ச ரூபாய் மதிப்பிலான 500 கிலோ தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பணி ஓய்வு</u>

திருச்சி அகில இந்திய வானொலி நிலைய தலைமை எழுத்தர் திரு. ராமமூர்த்தி இன்று பணி ஓய்வு பெறுகிறார்.

மத்திய பிரதேசம், ராமேஸ்வரம், தூத்துக்குடி, நீலகிரி, மதுரை, திருச்சி வானொலி நிலையங்களில் 35 ஆண்டுகாலம் பணியாற்றியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

ஐ. சி. சி. உலககோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று தொடங்குகின்றன.

லண்டன் ஓவலில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் முதல் அரையிறுதியில் ஆஸ்திரேலியா – வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

நாளைமறுநாள் நடைபெறும் 2-வது அரையிறுதியில் இங்கிலாந்து தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

இறுதிப்போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பேட்மிட்டன்</u>

கனடா ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சனீத் தயானந்த், முத்துசாமி சுப்ரமணியன் ஆகியோர் நாளை களமிறங்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖